தம்முடைய உரையில் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதற்காக ஆளுநர் அவர்களுடைய உரையை நாங்கள் எதிர்த்து, அண்ணா தி.மு.க.-வின் சார்பிலே ஆளுநர் அவர்களுடைய உரைக்கு எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது அருமை நண்பர் கணேசன் அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒட்டியும், திருத்தங்களைத் தந்து அதனை ஒட்டியும் இந்த அவையிலே மிகச் சிறப்பான விவாதங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்கள் ஆளுநர் உரையைக் கண்டிக்கிறேன் என்று குறிப்பிட்டு, முதல் அமைச்சரைப் பாராட்டுகிறேன் என்று தன்னுடைய வாதத்தைத் தொடங்கினார். அந்தப் பாராட்டுக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் பாராட்டியதற்கான காரணத்தைத் தொடர்ந்து குறிப்பிட்டார். முதல் அமைச்சர் மத்திய அரசின் மீது எப்படிப்பட்ட குறைபாடுகளைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறார்களோ, அவைகளையெல்லாம் கவர்னர் வாயிலாக எடுத்துச் சொல்வதில் வெற்றி பெற்றிருக்கிறார், ஆகவே அவரைப் பாராட்டுகிறேன் என்று எனக்குப் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டில் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டபோதும், ஆளுநர் உரையாற்றியிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டில் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் இந்த மன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்கள். எட்மண்ட் அவர்கள் சொன்ன வாதத்தின்படியும் மற்றும் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிற அடிப்படையிலும் ஆளுநர் உரைகள் அரசின் உரைகள்தான். ஆளுநர் உரை என்பது ஒரு சம்பிரதாயம். அரசினுடைய கொள்கைகள்தான் அதில் எடுத்துச்சொல்லப்படுகின்றன. அரசினுடைய திட்டங்கள், எதிர்கால நடவடிக்கைகள் இவற்றிற்கான குறிப்புகள் ஆளுநர் உரையில் காட்டப்படுகின்றன. 1967-ம் ஆண்டு அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபொழுது ஆற்றிய உரையிலும், எப்படி இன்றைக்கு ஆளுநர் உரையிலே முதல் அமைச்சருடைய கருத்துக்கள் எதிர் ஒலிக்கின்றன மத்திய அரசைப்பற்றி

என்று குறிப்பிட்டிருக்கிறாரோ அதைப்போலவே, அன்றைக்கும் அண்ணா அவர்களுடைய கருத்துக்கள்தான் அந்த உரையிலே எதிரொலித்திருக்கின்றன. சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது :

"கூட்டு அரசியல் அமைப்பு முறை" (Federal Constitution) ஒன்றிற்குட்பட்டு மாநில அரசாங்கம் இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. நாடு முழுவதற்கும் ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை நெறிமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தை சார்ந்தது. எனவே, மாநில அரசாங்கம் தனித்த முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசிகள் ஏற்றச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகைகள் பெருமளவில் முன்னேற்றம் காண முடியாத ஒரு நிலை இருப்பதையும் இவ்வரசாங்கம் உணர்ந்துள்ளது . . ."

அது மாத்திரமல்ல.

"மக்களின் விருப்பங்களை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கு தனக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவதற்கான ஏற்ற தருணம் வந்துவிட்டது என்றும் மாநில அரசாங்கம் கருதுகிறது. கூட்டு ஆட்சி நடைமுறையில் மலர வேண்டும் என்ற எண்ணம் இன்று எங்கும் மேலோங்கியுள்ளது . . . ."

அடுத்த சில பக்கங்களுக்குப் பிறகு,

"நமது அரசியல் அமைப்பின் கூட்டாட்சி இயல்பை வலியுறுத்திச் சொல்லவேண்டிய அவசியமும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் நிலை எப்படியிருக்க வேண்டுமென்று முதலில் கருதப்பட்டதோ அந்த நிலையை அளிக்கவேண்டிய அவசியமும் இன்று தோன்றியுள்ளன. திட்டத்தை தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் மாநிலங்கள் இனியும் செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல், சுறுசுறுப்பான பங்கு கொள்பவர்களாக மாற வேண்டும் . . ."

அது மாத்திரமல்ல. கவர்னர் உரைதான், முதல் அமைச்சரைப் பாராட்டினாரே எட்மண்ட் அவர்கள், அந்த முதல் அமைச்சர் தயாரித்த உரைதான்.

"மத்திய அமைச்சகங்களின் தற்போதைய பணியை மறு ஆய்வு செய்து, மாநிலங்களின் அதிகார வரம்பிற்குள் முற்றும் அடங்குகிற துறைகளில் மத்திய அமைச்சகங்கள் கடந்த சில ஆண்டுகளில் நிதி

வரையறைகளையும், ஏனைய வரையறைகளையும் விதிப்பதன் வாயிலாக அதிகமாய்த் தலையிடத் தொடங்கியுள்ள இப்போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும்.''

மேலும் 1968-ம் ஆண்டு கவர்னர் உரையில் குறிப்பிடுகிறார் :

''கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும் அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித்துறைகளை உயர்மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல் இன்றியமையாததென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும்''.

முதலமைச்சர் கருணாநிதி ஆளுநர் அவர்களுடைய உரையின் மூலமாக அந்தக் கருத்துக்களையெல்லாம் ஏற்றி, மத்திய அரசோடு ஆளுநரை போராட வைத்துவிட்டதாக திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். இது 1967-68-ல் அண்ணா அவர்கள் காட்டிய வழியே அல்லாமல், நாங்களாக உருவாக்கிக்கொண்ட வழி அல்ல என்பதையும், உள்ளபடியே அண்ணாவின் தம்பிகளாக இருப்பவர்கள் ஆட்சியை நடத்துகின்ற காரணத்தினால் 1967-ம் ஆண்டில் ஆளுநர் உரையில் எந்தக் கருத்துக்கள் இடம் பெற்றனவோ, அந்தக் கருத்துக்கள்தான் இப்பொழுது அறிவிக்கப்பட்ட ஆளுநர் உரையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையிலே இந்த அவையிலே பெரும்பாலும் இன்றைக்கு தமிழகத்திலுள்ள வறட்சி சூழல் பற்றி விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. இந்த வறட்சியை எப்படி நாம் சமாளிப்பது என்பதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களும் இங்கே எடுத்துச்சொல்லப்பட்டன. எதிர்க்கட்சி வரிசையிலிருந்து எதிர்த்தே தீரவேண்டும் என்கின்ற நிலைமையிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்றாலும், நான் அவைகளையெல்லாம் பெரிதுபடுத்திக்கொண்டிராமல், எதிர்க்கட்சி வரிசையிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்களில் ஏற்றுக்கொள்ளவேண்டிய கருத்துக்கள் இருக்குமேயானால் அவைகளையெல்லாம் நிச்சயம் ஏற்றுக்கொண்டு, இந்த வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை மிகவும் சீரிய முறையிலே செயல்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 பிப்ரவரி 27

தமிழகத்தில் இருக்கிற மொத்தம் ஏறத்தாழ 17,000 ரெவின்யூ கிராமங்களில் 11,000 கிராமங்கள் வறட்சியால் தாக்கப்பட்டுள்ளன. இந்த 11,000 கிராமங்களில் வறட்சிப் பணிகளை நாம் தீவிரப்படுத்தவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அந்தக் காரணத்தினாலேதான் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாயை இந்த வறட்சி துயர் தணிப்பிற்காக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதற்காக 10 கோடி ரூபாய் நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும் வருவாய்த் துறை அமைச்சர் அன்றைக்கு வெளியிட்ட கருத்திற்கேற்ப இதுவரையில் 29,000 வேலைகள் 11½ கோடி ரூபாய் மதிப்பில் அனுமதிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்கப்பெற்றுள்ளன.

இதன்னியில்—வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கியிருக்கிற அந்த 10 கோடி ரூபாய் அல்லாமல் இயல்பான திட்டச் செலவுகளுக்கு நடப்பு நிதியாண்டில் நாம் ஒதுக்கியிருக்கிற பணத்திலிருந்து வறட்சி நிவாரணப் பணிகளுக்கு, அந்த வேலைத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு திருப்பி விடப்பட்டிருக்கிற தொகை 7 கோடியாகும். ஆக, நடப்பு நிதியாண்டில் 17 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாம் செலவிடுவதற்கு முனைந்துள்ளோம்.

இந்த 17 கோடி ரூபாய் அல்லாமல் குடிநீர் திட்டத்திற்காக—அதிலும் குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் வேறுபல ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டத் திட்டங்களின் தன்மையிலும் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்துக்கொள்வோமேயானால் கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய் அளவுக்கு நடப்பு நிதியாண்டில் நாம் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று கணக்கிடலாம்.

இந்த வறட்சி நிவாரணப் பணிகள் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்குப் பெரிதும் பயன்பட வேண்டுமென்பதும், அப்படி வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகிற நேரத்தில் உருவாக்கப்படுகின்ற திட்டங்கள் நிரந்தரமாகப் பயன்படக்கூடிய திட்டங்களாக அமைய வேண்டுமென்பதும் அரசின் கொள்கையாகும். அதற்கேற்பத்தான் சிறிய, நடுத்தர, சற்று பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு இந்தப் பணியில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, சொல்ல வேண்டுமானால் மிகப்பெரிய கண்மாய்களான இராஜசிங்கமங்கலம் ஏரியும், இராமநாதபுரம் பெரிய ஏரியும், திருப்பத்தூர் ஏரியும், புதுக்கோட்டையில் கபினாடு கண்மாயும்—இவைகள் எல்லாம் இந்த வறட்சி நிவாரணப் பணிகளையொட்டி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற மிகப் பெரும் பணிகளாகும்.

திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். வேறுபல எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போதும் எடுத்துச் சொன்னார்கள். வறட்சி வருகிற வரையில் இவைகளை ஆழப்படுத்த காத்திருக்க வேண்டுமா என்று கேட்டார்கள். வறட்சி வராமல் தண்ணீர் தேங்கி இருக்கிற காலத்தில் இவைகளை ஆழப்படுத்துவது என்பது இயலாத காரியம்.

கடந்த 1969-ம் ஆண்டு வறட்சி வந்தபோதுகூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி நான் அறிவித்தது நன்றாக நினைவிருக்கிறது. 'நாம் இந்த பாதகத்தை சாதகமாக ஆக்கிக்கொண்டு, இந்த வறட்சியை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு, குளங்கள், ஏரிகள், கண்மாய்கள், வாய்க்கால்கள் இவைகளை எல்லாம் ஆழப்படுத்துகின்ற பணியை உடனடியாக உருவாக்க வேண்டும்' என்று எடுத்துச் சொன்னேன். அதற்கேற்ப அன்றைக்கு ஆழப்படுத்தப்பட்ட மதுராந்தகம் போன்ற ஏரிகள் எல்லாம் மறுபடி பெய்த மழையின் காரணமாக ஏற்கெனவே இருந்த கொள்ளளவைவிட அதிகம் கொள்ளளவு பெற்றன என்பதை யாரும் மறுத்திட இயலாது. அப்படி பல நிரந்தரமானப் பணிகள் 1969-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டன.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். 60 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்று ஆளுநர் பெருமான் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறதே; அது எங்ஙனம் இயலும் என்று கேட்டார்கள். மனித நாள்—அதாவது மனித உழைப்பு நாள் (மான் டேஸ்) என்ற வகையிலேதான் வருகின்ற 8, 9 மாதங்களில் ஏறத்தாழ 60 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தை தீட்டியிருக்கிறோம்.

அவர்கள் இன்னொரு ஐயப்பாட்டையும் எழுப்பினார்கள். 65 சதவிகிதம் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது—ஊதியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது; 35 சதவிகிதம் எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறதே; அது சரியா, நியாயமா? அது தேவையா என்ற ஐயப்பாட்டை எழுப்பினார்கள். அதிலே 35 சதவிகிதம் எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று கூறப்படவில்லை. 65 சதவிகிதம் ஊதியமாகத் தரப்போகிறோம்; மீதம் 35 சதவிகிதம் இருக்கிறது என்பது சரியான வாதமாகும். ஆனால் அந்த 35 சதவிகிதம் பொதுவாக இந்த வேலைவாய்ப்புக்களைப் பெறுபவர்களுக்காக வழங்கவேண்டிய மூலப் பொருட்கள்—சிமென்ட், உருக்கு, செங்கல் மற்றும் குழாய்கள்—இவைகளை எல்லாம் வாங்குவதற்காக அந்த 35 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறதே அல்லாமல் அதை எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று நாம் எண்ணிடத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பணிகள் எப்படி நடைபெற வேண்டுமென்பதையும் இந்த அரசு வரையறை செய்திருக்கிறது. ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்களுடைய மேற்பார்வையிலே எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகள் இவர்கள் அனைவரும் கலந்து இந்தப் பணிகள் ஒழுங்காக நடைபெறுகிறதை அடிக்கடி கண்காணித்து வருகிற முறைகளையெல்லாம் வகுத்து, 5,000 ரூபாய் வரையுள்ள பணிகளுக்கு பி.டி.ஓ.—வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அளவில் அனுமதிக்கலாம் என்றும், 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரையுள்ள பணிகளை கோட்ட ஆட்சி அதிகாரிகள்—ஆர்.டி.ஓ.—அனுமதிக்கலாம் என்றும், 10,000 ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதிக்கலாம் என்றும் அதற்கு மேற்பட்ட தொகையினை நிர்ணயித்து நடைபெறுகின்ற திட்டங்கள் அந்தந்தத் துறை தலைமை அதிகாரிகளையும் அரசையும் கலந்து முடிவெடுத்து அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் வரையறை செய்திருக்கிறோம்.

இதிலே கண்காணிப்புகள் வேண்டும், தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஏதோ அரசு இதில் கண்காணிப்பு இருக்கக்கூடாது என்று எண்ணுவது போலவும், அல்லது தவறு நடக்க வேண்டும்; அதன் காரணமாக ஒரு கெட்ட பெயரை இந்த அரசு வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி இருப்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு கண்காணிப்பு வேண்டும், தவறு நடக்கக்கூடாது என்று பேசியதை அறிவுரைகளாக நான் எடுத்துக்கொள்கிறேன். ஆனால் தவறு நடக்கிறது, நடக்கிறது என்று வேண்டுமென்றே சுட்டிக்காட்டுவது நல்ல மரபை நிச்சயமாக வளர்க்காது; அது இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய உற்சாகத்தை குறைத்துவிடக் கூடும் என்பதை, 'தவறு, தவறு' என்று அடிக்கடி எடுத்துக்காட்டுபவர்களுக்கு எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாகும் என்று குறிப்பிடுவேன்.

எட்மண்ட் அவர்கள் கூறினார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 1969-ம் ஆண்டு நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளில் தவறுகள் இருந்தன என்று தனக்கு புகார் வந்தது என்று சொன்னார்; அதற்கு முதலமைச்சர் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்டார். அவர் அப்படி கேட்காவிட்டாலும், அவர் கேட்ட தோரணை அதற்கு என்ன பதில் என்பது போல் இருந்தது.

1975 பிப்ரவரி 27] [டாக்டர் மு. கருணாநிதி]

நான் என்ன பதில் சொல்வது? எட்மண்ட் அவர்களே பதில் சொன்னார்கள். இதே முதலமைச்சர் 1969-ம் ஆண்டு இந்த பொறுப்பில் வீற்றிருந்தபோது 17 கோடி ரூபாய் செலவில் ஏற்பட்ட வறட்சி நிவாரண பணிகள் மிகச் செம்மையாக நடைபெற்றன; இப்போது ஏன் நடைபெறவில்லை என்று எட்மண்டே கேட்டு பிரதமருக்கு பதில் சொல்லியிருக்கிறார்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நான் சொன்னதெல்லாம், பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் 22-ம் தேதி சென்னையில் பேசிய பேச்சில் '1969-ம் ஆண்டு மத்திய அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தமிழ் நாட்டுக்குக் கொடுத்த பணத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து இன்னும் கணக்கு அனுப்பப்படவில்லை' என்று குற்றஞ்சாட்டி சொல்லியிருக்கிறார்கள், என்று சொன்னேன். அதற்கு முதலமைச்சரின் விளக்கம் தேவை என்பதுதான்; பணி நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள் பணிகளைச் செய்திருக் கலாம்; அதற்கான கணக்கை அனுப்பவில்லை என்று பிரதமர் சொன்னதாகச் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கணக்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னதாக எட்மண்ட் அவர்கள் சொல்லவில்லை. அனுப்பினோமா இல்லையா என்பதற்குப் பின்னால் பதில் சொல்கிறேன்.

1969-ம் ஆண்டு பணிகள், நற்பணிகள் மிகச் செம்மையாக நடைபெற்ற பணிகள். இதே முதலமைச்சர் கருணாநிதி தான்—கருணாநிதி என்று ஆரம்பித்து திருத்திக்கொண்டார், பிறகு கலைஞர் கருணாநிதி என்று திருத்திக் கொண்டார்—அன்றைக்கு முதலமைச்சராக இருந்தார். அவர் இன்றைக்கு ஏன் இதை ஒழுங்காக நடத்தவில்லை என்று கேட்டார். 1969-லே ஒழுங்காக நடந்தது என்று அவரே ஒப்புக்கொண்டு, பிறகு இன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் புகார் சொல்கிறார் என்று சொல்வது ஒன்றுக்கொன்று பொருத்த மாக இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

1969-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவிடப்பட்டத் தொகை 18.64 கோடி ரூபாய். இந்த 18.64 கோடி எப்படி மாநில அரசுக்கு கிடைத்தது, எப்படி செலவிடப்பட்டது என்பதை விபரமாகச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

மத்திய அரசு 11.25 கோடி ரூபாயைக் கடனாகவே வழங்கி இருக்கிறது; 3 கோடி ரூபாயைத்தான் மானியமாக வழங்கியிருக்கிறது. 14.25 கோடி ரூபாய் 1969-ம் ஆண்டு மத்திய அரசு நமக்கு வழங்கிய தொகை. அதிலே கடன் 11.25 கோடி ரூபாய், மிச்சம் உள்ள தொகை 3 கோடியே சொச்சம் ரூபாய்—நம்முடைய மாநில அரசு 1969-ம் ஆண்டு செலவழித்திருக்கிறது.

ஒன்று, கணக்கை அனுப்பவில்லை என்று சொன்னார். அவர்களுக்குத் தெரியும். 1969-70 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட். அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் அக்கவுண்டன்ட் ஜெனரல் கையெழுத்திட்டு, அது மட்டுமல்ல, ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் அறிக்கை. அந்த அறிக்கையில் 1969-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளில் ஊழல் எதுவும் நடந்ததாக எந்த விதமான குறிப்பையும் அவர்கள் எழுதவில்லை. அதன் தொடர்பாக பார்வையிட்ட பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி—நம்முடைய மாநில அரசின் சார்பில் போடப்பட்ட கமிட்டி—அதுவும் வறட்சி நிவாரணப் பணிகளில கணக்கு வழக்குகளை பார்வையிட்ட பிறகு எந்தவிதமான ஊழலும் நடைபெற்றதாக எதுவும் குறிப்பிடவில்லை. ஆக, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமக்குக் கணக்கு வரவில்லை என்று சொன்னதாக திரு. எட்மண்ட் கூறியது புதிய கூற்று ஆகும். ஆனால் இந்திராகாந்தி அம்மையார் சொன்னதாக—ஒழுங்கான பத்திரிகைகளில் நான் படித்தது, 'அதுபற்றி புகார்கள் வந்தன. இப்படிப்பட்ட புகார்கள் பல மாநிலங்களில் இருந்தும் வருகின்றன. நாம் செலவழிக்கிற பணம் மக்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும்' என்பதைத்தான் திருமதி இந்திராகாந்தி அம்மையார் கூறினார்களேயல்லாமல் வேறு எதையும் கூறவில்லை. அதை வைத்துக்கொண்டு, திருமதி இந்திரா காந்தி அவர்களே குறை கூறிவிட்டார்கள் என்று எழுத முடியாதா என்ற எண்ணத்தில் செய்திகளை தேடி அலைந்து கொண்டிருக்கிறவர்கள் எதையாவது இந்த ஆட்சிக்கு எதிராக எழுத வேண்டும் என்று தவறான தலைப்புகளைக் கட்டி எழுதியிருப்பார்களே தவிர வேறு அல்ல.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கூடச் சொன்னார்கள். இன்று திரு. லத்தீப் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். '1969-இல் நடைபெற்ற வறட்சிப் பணிகள் குறித்து புகார்கள் வந்திருக்கின்றனவா, அதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறீர்களா' என்று. நான் அந்தக் கேள்விகளை ஆராய்ந்து நமக்கு பதில் அளிக்கும்படியாக நமது அரசு வருவாய்த்துறை செயலாளரிடம் கேட்டுக் கொண்டேன். அவர் எனக்கு வழங்கியுள்ள பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"I have carefully gone through the Secretariat Personal Registers of the Revenue Department for the period from September 1968 to July 1970 relating to the subject 'Drought Relief'. It is seen that no petition alleging misuse of drought funds has been forwarded by the Government of India to the State Government either for investigation or for remarks during this period."

என்று ரெவின்யூ செக்ரடரி கையெழுத்திட்டு இந்தப் பதிலை எனக்கு அனுப்பியிருக்கிறார். இதைத்தான் நண்பர் ஜேம்ஸ் அவர்களும், இன்றையதினம் திரு. லத்திப் அவர்களும் கேட்டார்கள். '1969-இல் நடந்த வறட்சி பணிகள் குறித்து புகார்கள் வந்திருக்கின்றனவா ; அதுபற்றி மத்திய அரசு நம்மிடத்தில் ஏதாவது விளக்கம் கேட்டிருக்கிறதா" என்று. இந்த அரசுக்கு அதுபோல எதுவும் வரவில்லை என்பதைத்தான் வருவாய்த்துறை செயலாளரின் விளக்கம் சுட்டிக் காட்டுகிறது.

பிறகு '1972-ஆம் ஆண்டிலே வெள்ளம் ஏற்பட்டது. அந்த வெள்ளத்தைச் சமாளிக்க அதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 13.61 கோடி ரூபாய். அந்த 13.61 கோடி ரூபாயிலும் மத்திய அரசு நமக்கு கடனாக 8.89 கோடி தந்தது. மானியமாக 87 லட்சம் தான் தந்தது. ஆக, மத்திய அரசு கடனாகவும், மானியமாகவும் தந்தது 9.76 கோடிதான். இதில் கடனாக இருப்பது 8.89 கோடியாகும். மீதி நான்கு கோடி ரூபாயையும் மாநில அரசே தான் அப்போது செலவு செய்திருக்கிறது. மிச்சமுள்ள பெருந்தொகை கடன் நிலையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

1969-இல் நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளானாலும், பிறகு 1972-இல் நடைபெற்ற வெள்ள நிவாரணப் பணிகளானாலும்—இவைகளில் எந்தத் தவறும் நடைபெறவில்லை. எந்த ஊழலும் நடைபெறவில்லை என்பதை நான் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

நான் ஒன்று சொல்வேன். பல கோடி ரூபாய் காரியங்கள் நடைபெறுகிற காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தவறுகள் நடைபெற்று—அந்தத் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அந்தத் தவறுகளைக் களைவதற்காக தவறு செய்தவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் இந்த அரசின் மீது குறை சொல்வதில் நியாயம் இருக்க முடியும். நான் இன்றைக்கும் சொல்கிறேன் இதை மேற்பார்வை பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி—தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஆக நம் அனைவருக்கும் இந்தக் கடமையிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களல்லாத பொதுமக்களுக்கும் கூட அந்தக் கடமை இருக்கிறது. அவர்கள் அந்தக் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி—எங்கு தவறு நடந்தாலும்—"என்னை ஒரு கமிட்டியில் போட்டால்தான் அந்தத் தவறைக் கண்டுபிடிக்க முடியும்" என்றில்லாமல்—பொறுப்பைக் கொடுத்தால்தான் அதைக் கண்டு

பிடிப்போம் என்று பிடிவாதம் பிடிக்காமல்—அவரவர்கள் தங்கள் தங்கள் கடமையை உணர்ந்து எங்கு தவறு நடந்தாலும் அதைச் சுட்டிக்காட்ட முற்பட்டால் இந்தக் காரியங்கள் இன்னும் திறம்பட நடைபெறும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். வறட்சி நிவாரணப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவதற்கு அரசுதான் அங்கங்கே சர்வகட்சி கமிட்டிகளைப் போட்டால்தான் என்ன? போடக் கூடாது என்பதில் பிடிவாதம் காட்ட வேண்டிய அவசியம் என்ன? அதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சர்வ கட்சி கமிட்டி போடுவது என்றால் சில இடங்களில்—நம் நாட்டில் எத்தனை கட்சிகள்தான் இருக்கின்றன என்பதற்கு எண்ணிக்கையே தெரியவில்லை. சில இடங்களில் சர்வகட்சி என்கிறபோது பிரதிநிதிகளே இல்லாமல் இருப்பார்கள். அப்படிப்பட்ட சங்கடங்கள் காரணமாகத்தான் சர்வகட்சி கமிட்டி தேவையில்லையென்று கருதுகிறேன். இந்த கண்காணிப்புப் பணிகளை பொதுமக்களேகூட ஏற்றுக் கொள்ளலாம்

அடுத்து, நமது குடிநீர் வாரியத்தின் சார்பாக என்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதாக நமது கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும் போது கூடக் குறிப்பிட்டார்கள். 2, 3 மைல் தூரம் நடந்து சென்று குடி தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலையில் பல இடங்களில் மக்கள் குடி தண்ணீர் கிடைக்காமல் அல்லலுறுகிறார்கள் என்று சொன்னார். நான் அவை களை அறவே மறுக்கவில்லை. இந்த நிலைமைகளை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைத் தான் எண்ணிப் பார்க்க வேண்டும். குடிதண்ணீர் பிரச்சினையைச் சமாளிக்க குடிநீர் வாரியத்தின் சார்பாக மாத்திரம் வறட்சி நிவாரண சிறப்புப் பணி களாக 2,392 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன இந்த நடப்பு நிதியாண்டில். அதைத்தவிர இந்த நிதி ஆண்டில் கிராமங்களில் 1,107 மேல்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்கும், 2,150 இடங்களில் ஹாண்டு பம்பு போடுவதற்கும் பணிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை எல்லா வற்றுக்குமாக சுமார் 5½ கோடி ரூபாய், நான் முதலில் குறிப்பிட்ட 19 கோடி ரூபாயை உள்ளிட்டு, 5½ கோடி ரூபாய் குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு செலவிட திட்டமிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வறட்சி நேரத்தில் உணவுத் தட்டுப்பாடும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த உணவுத் தட்டுப்பாட்டை நாம் முழுமையாகப் போக்க முடியாமல் இன்றைக்கு தவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதும், அதற்கு மத்திய அரசினிடத்தில் உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதும், பொதுமக்களும் சங்கடத்தை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதும் இந்த அவையில் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களாகும்.

உணவு தானியங்களைப் பரவலாக விநியோகம் செய்வதற்கு அரசின் சார்பில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தொகையோடு நாம் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிற குடும்பக் கார்டுகள் இவைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 90 லட்சத்தில் இருந்து 95 லட்சம் குடும்பக் கார்டுகள் இருந்திடல் வேண்டும் நம் மாநிலத்திலுள்ள மக்கள் தொகை கணக்கின்படி. இதில் இதுவரை 37 லட்சம் குடும்பக் கார்டுகளை நாம் இப்போது வழங்கி, நியாய விலையில் உணவு தானியங்களை வழங்கி வருகிறோம். இதை மேலும் விரிவுபடுத்த, நமது வருவாய்த் துறை அமைச்சர் குறிப்பிடுகின்ற நேரத்தில் கூட 70 லட்சம் குடும்பங்களுக்கு உணவு தானியம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்த முயற்சியின் காரணமாக அந்த 70 லட்சம் குடும்பங்கள் என்பதைக்கூட 75 லட்சம் குடும்பங்கள் வரை உணவு தானியம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்வேன். இப்படி வழங்குவதற்கே நமக்கு மாதந்தோறும் 55 ஆயிரம் டன் அரிசி, 55 ஆயிரம் டன் கோதுமை தேவைப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவு வழங்குவதற்கே கூட இது தேவைப்படுகிறது. ஆகவேதான் இதிலே ஒரு லட்சம் டன் அரிசியையும் கோதுமையுமாக நமக்கு மத்திய அரசு தரவேண்டுமென்று நாம் கேட்டோம். அதிலே பிப்ரவரி திங்களில் இருந்து எற்கெனவே தந்துகொண்டிருக்கிற 9 ஆயிரம் ஆகவேதான் இதிலே ஒரு லட்சம் டன் அரிசியையும் கோதுமையுமாக மத்திய அரசு நமக்கு வழங்கியிருக்கிறது. அண்மையில் நான் பிரதமரையும் திரு. ஜகஜீவன்ராம் அவர்களையும் சந்தித்து மீண்டும் வலியுறுத்தியதற்கு, வருகிற மார்ச் திங்கள் முதல் 50 ஆயிரம் டன் கோதுமைக்குப் பதிலாக 60 ஆயிரம் டன் கோதுமையை மத்திய அரசு கொடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அன்றைக்கு சுகாதார அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது மத்திய அரசு நமக்கு 50 ஆயிரம் டன் கோதுமையை பிப்ரவரி திங்களில் தர ஒத்துக்கொண்டிருக்கிறதே தவிர இன்னும் அது

நமக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் அது நமக்குக் கிடைத்திருக்கிறது என்கிறாரே, இதில் எது உண்மை என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த 50 ஆயிரம் டன் கோதுமை தருவது என்ற அடிப்படையில் அரிசியும் இவ்வளவு வேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கிறது. அது முழுவதும் கிடைக்கவில்லை என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன்.

**திரு. எஸ். வடிவேல் :** முதலமைச்சர் அவர்கள் 75 லட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். இந்த 75 லட்சத்தில் விவசாயத் தொழிலாளர்களைச் சேர்த்திருக்கிறார்களா அல்லது விட்டுவிட்டார் களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.00)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விவசாயத் தொழிலாளர்களிடத்தில் நண்பர் வடிவேல் அவர்களைவிட, இந்த அரசுக்கு அதிக அக்கறை உண்டு என்பதை நண்பர் வடிவேல் அவர்களே உணர்வார்கள்.

வருகிற மார்ச் திங்களிலிருந்து கோதுமை 60,000 டன்னை நமக்குக் கிடைக்கவிருக்கிறது. அந்தத் தகவல் நமக்கு நேற்றைய தினம்தான் கிடைத்திருக்கிறது. ஆகவே அதை இந்த அவையில் தெரிவிப்பது பொருத்தம் என்ற வகையில் இப்பொழுது தெரிவிக்கின்றேன்.

அரிசி தேவை என்பதை வலியுறுத்தி நானும் உணவு அமைச்சர் நண்பர் மாதவனும் டெல்லிக்குச் சென்று பிரதம அமைச்சரிடமும் மாண்புமிகு ஜெக ஜீவன்ராம் அவர்களிடத்திலும், மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களிடத் திலும், மாண்புமிகு சிண்டே அவர்களிடத்திலும் மீண்டும் மீண்டும் கேட்டிருக் கிறோம். வெளிநாட்டு அரிசியையாவது வரவழைத்துக் கொடுங்கள். விலை கொஞ்சம் கூடுதலாகயிருந்தாலும் அதுபற்றிய பிரச்சினையை மத்திய அரசும் மாநில அரசும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கலாம். ஆகவே, வெளிநாட்டு அரிசியையாவது வரவழையுங்கள் என்று நாம் கேட்டிருக்கிறோம். அதிலும் நாம் நம்பிக்கையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இதுவரையிலே அதுபற்றிய நல்ல செய்தி நமக்கு கிடைக்கவில்லையென்றாலும், விரைவிலே அதுபற்றிய நல்ல செய்தி கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த அவையிலே லெவி கொள்முதல் பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன. நாம் நிர்ணயித்திருக்கிற லெவி கொள்முதல் ஆற்றுப் பாசனத்திலே ½ ஏக்கருக்குக் குறைவாக இருந்தாலும் லெவி இல்லையென்றும் ஆற்றுப் பாசனம் இல்லாத மற்ற இடங்களில் 1 ஏக்கர் வரையிலே லெவி இல்லையென்றும் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதனைப் போலவே ஆற்றுப் பாசனத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கும் ½ ஏக்கருக்குப் பதிலாக 1 ஏக்கராக ஆக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கள் இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டன. அதை ஏற்க இயலாதிருப்பதற்கு உள்ள முக்கியமான காரணத்தை நான் குறிப்பிடுவது அவசியம் என்றே கருதுகிறேன்.

நஞ்சை நிலம் படைத்தவர்கள், 1 ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் இன்றைக்கு மொத்தமாக நஞ்சை நிலம் படைத்தவர்களில் 50 சத விகிதம் இருக்கிறார்கள். இந்த நஞ்சை நிலம் படைத்தவர்களுக்கு, ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு நாம் விதிவிலக்கு அளித்து விடுவோமானால் நம்முடைய கொள்முதல் திட்டமும் பாதிக்கப்படும்.

அதேபோல், குத்தகைதாரர்களிடமிருந்து அவர்களுடைய பங்கிலிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்ற கருத்தும் எடுத்துக் கூறப்பட்டது. அப்படி கொள்முதல் செய்வதில்லையென்று நாம் அவர்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டால், குத்தகைதாரர்களுடைய சதவிகிதம் நம்முடைய மாநிலத்தில், மொத்தத்தில் 20 சதவிகிதம் என்று இருப்பதால் அந்த 20 சதவிகிதத்தினரிடமிருந்தும் கொள்முதல் மூலமாக நமக்கு எதுவும் கிடைக்காமல் போய்விடும். அதற்காகத்தான் ஒரு சமாச ஏற்பாடாக குத்தகைதாரர்களும் நில உடமையாளர்களும் கூட்டுப் பொறுப்பாக அரசாங்கக் கொள்முதலுக்கு நெல் தரவேண்டுமென்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இவைகளையெல்லாம் மாற்றுவது என்பது இயலாத காரியம். ஒருபுறத்திலே கொள்முதல் தீவிரப் படுத்தப்படவில்லையென்று வாதிடுகிறார்கள். இன்னொரு புறத்திலே பொது விநியோக முறை போதாததாக இருக்கிறது என்று வாதிடுகிறோம். கொள்முதலைத் தீவிரமாக்க வேண்டுமென்று வாதிடுவதிலும் பொது விநியோக முறையை அதிகமாக்கு, விரிவாக்கு என்று வாதிடுவதும் ஒன்றுக்கொன்று முரணான வாதங்கள் என்பதை உணர்வார்களானால் இந்த வேறுபட்ட கருத்துக்களைச் சொல்ல மாட்டார்களென்றே நான் நம்புகிறேன்.

பொது விநியோகத்திலே கூட தவறுகள் ஏற்பட்டு விடாமலிருக்க வேண்டுமென்பதற்காகத் தனியாரிடத்திலே இந்த விநியோகத்தை ஒப்படைக்காமல் ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்

மூலமாகவும் இந்த இரண்டு அமைப்புக்களும் இல்லாத இடங்களில் கிராமப் பொது மக்களுடைய குழுக்களின் மூலமும் இந்தப் பொது விநியோகத்தை, தானிய விநியோகத்தை நடத்திக்கொண்டு வருகிறோம்.

பெரிய நிலச்சுவான்தார்களிடத்தில் நெல் கொள்முதலுக்குச் செல்வதில்லை யென்ற ஒரு கூற்று இங்கே எடுத்துக் காட்டப்பட்டது. அது தவறானது. பெரிய நிலக் கிழார்களிடத்திலே கொள்முதல் செய்ய இந்த அரசு அஞ்சு கிறது என்கிற வாதத்தினை நான் ஏற்றுக்கொள்ள இயலாது. நாட்டு மக்கள் அதனை நன்றாக உணர்வார்கள்.

எங்கேயாவது, எந்த அதிகாரியாவது பெரிய மிராசுதார்களிடத்திலே கொள்முதல் செய்ய பயந்தார், அல்லது தவிர்த்தார் என்று எந்த அதிகாரி மீதாவது குற்றத்தை நீங்கள் சுமத்துவீர்களானால் அது ஆதாரம் உள்ள குற்றச் சாட்டாக இருக்குமானால் அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே உங்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நேரத்தில் பட்டினிச் சாவு ஏற்படுகிறது என்று சொல்லாமல் இருந்தால் . . .

**திரு. கே. டி. கே தங்கமணி :** மார்ச் மாதம் முதற்கொண்டு, 60,000 டன் கோதுமையை மத்திய அரசு கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படி யானால் 6 கோடி கிலோ ஆகிறது. அவர் ஏற்கனவே சொன்ன குடும்ப அடிப் படையிலே பார்த்தால், கிராமப் புறத்திலே விவசாயத் தொழிலாளிகள் உட்பட ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது 7 கிலோவாவது கிடைக்குமே, அதற்கு உத்தரவாதம் செய்ய அரசாங்க ஏற்பாடு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த அளவிற்கு அதிகமாகக் கொடுக்க இயலாது என்ற காரணத்தாலேதான் குறித்த அளவு, அந்தந்த மாவட்ட நிலைமைக்கு ஏற்ப, பகுதி நிலைமைகளுக்கேற்ப, நாம் அந்த அளவை தர முடியும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதிக அளவு கொடுப்பதற் கேற்ற அளவுக்கு நம்மிடத்திலே உணவு தானியங்கள் இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

பட்டினி சாவு பற்றி பேசுகிற நேரத்தில் மிக அதிகமாகப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் பகுதியில் 40 பேர், 50 பேர் இறந்து விட்டார்கள். அவர்களெல்லாம் பட்டினி காரணமாகச் செத்து விட்டார்கள் என்று பத்திரிகையிலும் செய்திகள் வருகின்றன. இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதை எடுத்துப் பேசினார்கள்.

இலங்கையிலிருந்து வந்த அகதிகள் 3-7-1974 முதல் 10-1-1975 வரை இந்தத் திருவாங்குளத்திலே வந்து குடியேறினர்கள். அப்படிக் குடியேறிய குடும்பங்களுடைய மொத்த எண்ணிக்கை 246. இந்த 246 குடும்பங்களின் மொத்த தொகை 1,800. இந்த 1,800 பேரில் 42 பேர் மாணம் அடைந்திருக்கிறார்கள்—எவ்வளவு காலத்திலே? 26—7—1974 முதல் 29—1—1975 வரை, 6 மாதங்களில் 42 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே தங்கமணி:** முதன் முதலிலே புதுக்கோட்டை பகுதியிலே நான் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது, அவர்கள் இதை அறிவித்தனர். அங்கு அவர்கள் ஆஸ்பத்திரியிலும் மற்ற விதத்திலும் தெரிவித்தது, 3 மாத காலத்திலே 32 பேர், குறிப்பாக, சிலோனிலிருந்து வந்த அகதிகள், திருவாங்குளம் காலனியிலிருந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். சாதாரணக் குழந்தைகளும், மற்றவர்களும் இறந்திருக்கிறார்கள். அதனை இன்றைக்குப் பரிசீலனை செய்து பார்த்தால் எப்படி இறந்தனர் என்று தெரியும். நாங்கள் பட்டினியால் செத்தார்கள் என்று சொல்லலாம். நீங்கள் அப்படி இல்லை, குறைந்த சாப்பாடு, அல்லது டையரியா ஆகிய காரணங்களால் இறந்தார்கள் என்று சொல்லலாம். இப்படி போதுமான வசதியில்லாத காரணத்தாலே, குறிப்பிட்ட பகுதியிலே அவர்கள் கணக்குப்படியே 42 பேர் இறந்திருப்பது, பாராட்டத்தக்க விஷயமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** யாரும் அதற்காகப் பாராட்டுக் கூட்டம் போட வேண்டுமென்று விரும்பவில்லை. மொத்தமுள்ள 1,800 பேரில் இறந்தவர்கள் 42 பேர். அது 6 மாத காலத்தில். நம் அதிகாரிகள் மூலமாகவும், மற்றும் விசாரித்த அளவில் வலிப்பு நோயால், வயோதிகத்தால், பாம்புக் கடியால், கருச் சிதைவால், பிரசவ நேரத்தில் இப்படி இறந்தவர்கள் என்கின்ற காரணங்கள்தான் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த மொத்தம் உள்ள 246 குடும்பங்களில் வசதி படைத்த குடும்பங்கள் போக, மீதமுள்ள 203 குடும்பங்களுக்கு இந்த 6, 7 மாத காலத்தில் பிழைப்பு மானியமாக, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் என்ற வகையில், அவர்களுக்கு ரூ. 1,03,500 வழங்கப்பட்டிருக்கிறது. 203 குடும்பங்களுக்கு அது வழங்கப்பட்டது போக, மொத்தமுள்ள 246 குடும்பங்களுக்கும் விவசாயக் கடனாக ரூபாய் 1 இலட்சம் இதுவரையிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே வரும்போது, ரூபாய் 5,000 லிருந்து ரூபாய் 10,000 வரை சொத்துடையவர்கள் அல்லது ரூபாய் 5,000 வரை சொத்துடையவர்கள் என்கின்ற பாகுபாட்டின் அடிப்படையிலே கூடப் பல அகதிகள் வந்திருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து வந்ததும் அங்குள்ள மாறிய தட்ப வெப்பங்களுக்கும் இங்குள்ள தட்ப வெப்பங்களுக்குமுள்ள மாறான சூழ்நிலைகளாலும் சிலருக்கு வியாதிகள் ஏற்பட்டன என்கின்ற காரணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஏதோ பட்டினிச் சாவு இருந்து அதை மறைக்க வேண்டுமென்று அரசு ஒரு காலும் விரும்பவில்லை. பட்டினிச் சாவு, பசி, இவைகளையெல்லாம் போக்கத் தான் நாமனைவரும் இங்கு சொல்லப்பட்ட, எல்லா விவாதங்களிலுமிருக்கிற நல்ல காரியங்களையெல்லாம் குறித்துச் செய்வதற்கு முயன்று வருகிறோம்.

நான் அறிவித்தேன், சென்ற முறை, டீசல் பம்ப் செட் வைப்பதற்கு இப்பொழுது மானியம் வழங்கப்படுவதில்லை, இந்த வறட்சியையொட்டி ரூபாய் 1,000 அவர்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதிலே எத்தனை பேருக்கு வழக்கப்பட்டிருக்கிறது? இதெல்லாம் வெறும் ஏட்டளவி லேதானிருக்கிறது என்றெல்லாம் கூட பேசப்பட்டது. நான் அவர்களுக்குக் கூறுவது, நாம் தனியாக 17-12-1974-ல் ஜி.ஓ. போட்டு, 31-12-1974 வரையில் 578 டீசல் பம்பு செட்டுகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறோம். 15—2—1975 வரை 861 டீசல் செட்டுகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறோம். ஆக மொத்தம் 1,439 டீசல் பம்ப் செட்டுகளுக்கு ரூபாய் 1,000 வீதம் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். நீங்கள் தர வேண்டிய ரூபாய் 1,000 மானியத்தை முதலிலேயே தருவதில்லை. டீசல் பம்ப் செட்டுகளை அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கூட்டுறவு சங்கத்திலே வாங்கிய பிறகு கடைசித் தவணையாகத்தான் ரூ. 500, ரூ. 500 என்று கொடுக்கிறார்கள். ஆகவே ஒரு 500 ரூபாயை கடைசி தவணை யாகவும் ஒரு 500 ரூபாயை முதல் தவணையாகவும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர் களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு முன்னால் 500 பின்னால் 500 என்றுகூட இல்லாமல் முதலிலேயே 1,000 ரூபாயை அரசு மானியமாக வழங்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்ளுவேன்.

திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது விளம்பரங்களுக்கு செலவழிக் கிறீர்கள், விளம்பரங்களில் வந்த விஷயங்கள் நிறைவேறவில்லை என்றார். கிணறுகளை ஆழப்படுத்துதல், கிணறுகளுக்கு அடிவெட்டு வெட்டுதல் போன்ற இவைகளுக்கு என்ன கடன் கொடுத்தீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். கிணறுகளை ஆழப்படுத்துதல், அடிவெட்டு வெட்டுதல் ஆகியவற்றிற்காக 1-4-1974 முதல் 31-1-1975 வரையில் நிலவள வங்கி மூலம் 33.51 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் வறட்சிக் காலமாகிய டிசம்பர் 1974 முதல்

ஜனவரி 1975 வரையில் 2 மாத காலத்திற்கு மாத்திரம் 5.66 லட்சம் ரூபாய் 280 பேர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு சில குற்றச்சாட்டுக்களையும் இங்கே எடுத்துக்காட்டியுள்ளார்கள். அண்ணா தி.மு.க. சார்பிலே பேசிய நண்பர் குழ. செல்லையா அவர்கள் ஏதோ நெல் கொள்முதல் செய்வதற்காக உணவுக் கார்ப்பரேஷன் மூலமாக ஆர். பி. முருகன் செட்டியார் என்பவருக்கு ரூ. 1,74,685-க்கு 17-1-1975 அன்று ஒரு செக் வழங்கப்பட்டது என்றும் அந்த செக் நம்பர் குறித்தும் அதே போல் ஆளே கிடையாது என்றும் சொன்னார்கள். குற்றச்சாட்டு வரையிலே சரிதான். ஆனால் அந்த ஏமாற்றுக்காரர் அந்த செக்கைக் கொண்டு வங்கியிலே மாற்ற முடியாமல் அதற்கு முன்பே பிடிக்கப்பட்டார். அவர் 1.74 இலட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் நெல்லைக் கொடுத்ததாக ஒரு போலிக் கணக்கைக் தயாரித்து, பட்டுக்கோட்டை தண்டாயுதம் அரிசி எண்ணெய் ஆலையின் சொந்தக்காரரான திரு. முருகையன் செட்டியாரின் பெயரில் ஒரு கணக்குக் கொடுத்துள்ளார். முருகையன் செட்டியாரின் பெயரில் கொள்முதல் செய்ய ஒருவரையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நியமிக்கவில்லை. ஆனால் அதிகாரிகளின் கையெழுத்தையும் முருகையன் செட்டியாரின் கையெழுத்தையும் போலியாக இவரே கையெழுத்திட்டு அம்மாபேட்டை இலாகாவில் கணக்கு அதிகாரியிடம் பொய்க் கணக்குக் கொடுத்து செக்கை வாங்கினார். ஆலையின் சொந்தக்காரரான இப்ராஹீம்—இப்ராஹீம் என்பவரின் மகன் ஆனசு என்பவர்—அவருடைய தகப்பனாருக்கே தெரியாது செய்த இந்த மோசடி பற்றி அவருக்குத் தெரியவந்து அவர்கள் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து இப்ராஹீம் மகனுடன் அவரோடு சம்பந்தப்பட்ட வேறு இருவர் பேரிலும் போலீசாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது. அந்த செக் வங்கியில் போய் பணம் கொடுக்கப்படவில்லை. அதற்கு முன்பே இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏதோ 60 லட்ச ரூபாய் தான் விதை நெல்லுக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் அது புதுக்கோட்டைக்கே போதுமா என்று புதிய அ.தி.மு.க. உறுப்பினர் இளஞ்செழியன் அவர்கள் கேட்டார்கள். 60 லட்சம் ரூபாய் என்று போட்டிருந்தால் புதுக்கோட்டைக்கே போதாதுதான். ஆனால் மேலும் 60 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்படும் என்றுதான் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தமாக, மாநிலத்திற்கு விதை நெல்லுக்காக 60 லட்ச ரூபாய் என்று குறிப்பிடப்பட

வில்லை. மொத்த விதை நெல் 19 ஆயிரம் டன் என்றும் அதற்காக மதிப்பீட்டுச் செலவு 3 கோடியே 10 லட்சம் என்றும் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குறிப்பாக சொல்லப் பட்ட வாசகங்களுக்கு அதுவும் அரசியல் ரீதியாகச் சொல்லப்பட்ட வாசகங்களில் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் எடுத்துச் சொன்னது மாநில சுயாட்சி பற்றியது ஆகும். மாநில சுயாட்சி பற்றி தங்கமணி அவர்கள் கவர்னர் உரையிலேகூட அதிகக் கவனம் செலுத்தாமல் திரு. தங்கமணி அவர்கள் மாநில சுயாட்சி கொள்கையை எதிர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டியபோது அதற்கு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் ரஷ்ய நாட்டிலே இருப்பதைப் பற்றிச் சுட்டிக்காட்டி அதற்குப் பதில் கேட்டபோது சின்னப் பிள்ளைகளுக்கு எல்லாம் நான் என்ன பதில் சொல்வது என்று எண்ணியோ என்னவோ திரு. தங்கமணி அவர்கள் பதில் சொல்லாமலேயே அமர்ந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ரஷ்ய நாட்டைப்பற்றி காட்டிய உதாரணம் தவறு என்று நான் அந்த அமைச்சரிடம் தனியாக தெரிவித்தேன். ரஷ்ய நாட்டில் இருக்கிற கான்ஸ்டிட்யூஷனில் பிரிந்து போகக்கூடிய உரிமை கொடுக் கப்பட்டிருந்தாலும்கூட எப்போதும் அது அமுலுக்கு வருவது கிடையாது. காரணம், ஒரே கட்சி ஆட்சியிலே இருப்பதால் அந்த நிலைமை வராது என்பதால் அப்படி வைத்திருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரே கட்சி ஆட்சியிலிருப்பதால் அமுலுக்கு வராது, பல கட்சி ஆட்சியிலிருந்தால் அமுலுக்கு வரும். ஆகவே சுயாட்சி கொடுங்கள் என்று கேட்கிறோம் . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ரஷ்ய அரசியல் சட்டத்திலே மாநில சுயாட்சியும் பிரிந்து போகும் உரிமையும் ஏட்டளவிலே தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே யொழிய நடைமுறையிலே கொடுக்கப்படவில்லை. ஐ.நா. சபையில் இடம் பெறுவதற்கு மட்டுமே உக்ரேனும், பைலோ ரஷ்யாவும் தனியாகக் கூறப் பட்டன. ஆனால் லாட்வியாவும், லித்தோனியாவும் தனியுரிமை கேட்டபோது அது கடுமையாக ஒடுக்கப்பட்டது. இதுதான் வரலாறு.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது ஒரு சாதாரண அக்கடமிக் பிரச்னையாகி விடக்கூடாதே என்பதற்காக நான் பதில் சொல்லவில்லை. என்னிடம் பதில் சொல்வதற்கு விஷயங்கள் இருக்கின்றன. பைலோ ரஷ்யா, உக்ரேனியா ஆகிய

இரண்டுக்கும் ஐ.நா.விலே இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவை இரண்டும் ரஷ்யாவிலே இணைந்து இருக்கவேண்டுமென்று விரும்புகின்ற பகுதிகள் ஆகும். அவர்கள் பிரிந்து போகவேண்டுமென்று சொல்லவில்லை. ஸ்டாலினைப் பொறுத்தவரையில் முதன் முதலில் என்ன மினிட்ஸ் சொல்லப் பட்டதோ அதனுடைய காப்பியை நான் பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யுத்தம் முடிந்ததற்குப் பிறகு முதலாளித்துவ நாடுகள் எல்லாம் சேர்ந்துகொள்ளக் கூடும். ரஷ்யா பெரிய நாடாக இருக்கிறது, இரண்டு கோடி மக்களை இழந்துவிட்டிருக்கிறது, ஆகவே அங்கே ஒரு பிரிதிநிதித்துவம் போதாது, ஆகவே மூன்றுவது கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், அதனால்தான் கொடுக்கப்பட்டது. அதனால்தான் நான் ஹிஸ்டாரிக்கல் பேக் ரவுண்ட் இருக்கிறது என்று சொன்னேன். இங்குகூட அட்டானமி என்று வரக்கூடிய காலத்திலே ரொம்பப் பின்தங்கிய பகுதிகளுக்குத்தான் இன்னும் அதிகமான வசதியைக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே அந்த கன்சப்ஷன் இருக்கிறதே தவிர தமிழ்நாட்டிற்கு அட்டானமி வேண்டுமென்று சொல்வது

It is taking us in a reverse direction. என்ற முறையிலே அந்தக் கருத்து பொருத்தமில்லை என்றுதான் எடுத்துச்சொன்னேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, மாநில சுயாட்சிபற்றி அண்ணா சொன்ன மாநில சுயாட்சி என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில சுயாட்சிபற்றி ஒரு மாநாடு நடத்தி ஒரு தனிக்கொடி இந்த மாநிலத்திற்கு வேண்டுமென்று கேட்டார்கள். ஆகவே தமிழ்நாட்டிற்கு ஒரு தனிக் கொடியும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தனி இடம் வேண்டும் என்பதுதான் தி.மு.க. வினுடைய கொள்கையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. இராமச்சந்திரன் ஐ.நா. விலே தனி இடம் ரஷ்யாவிலுள்ள ஒரு மாநிலத்திற்கு இருந்தது என்று குறிப் பிட்டது அந்த அளவிற்கு அங்கே மாநில சுயாட்சி இருக்கிறது என்ற அளவிற்குத் தெரிவிப்பதற்குத்தானே தவிர ஐ.நா.விலே தமிழ்நாட்டிற்கு ஒரு தனி இடம் வேண்டுமென்பதற்காக அல்ல. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ரஷ்யாவிலே பிரிந்துபோகும் உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஏட்டிலேதான் அங்கே இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அங்கே ஏட்டிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். இங்கே ஏட்டிலே இருந்தால் நாட்டிலே கொண்டுவரக்கூடிய தைரியம் எங்களுக்கு இருக்கிறது. ரஷ்யாவிலே ஏட்டிலேதான் இருக்கிறது நடைமுறையில் இல்லை, ஏட்டிலேதான் இருக்கிறது, நாட்டிலே இல்லை . . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்**: நடைமுறையில் வராது என்றுதான் ஏட்டிலே வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: ரஷ்யாவிலே இருப்பது பிரிந்து போகக்கூடிய உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் கோருவது பிரிந்துபோகக்கூடிய உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி அல்ல. நாடு பிரிந்துபோகாமல் இருப்பதற்குத்தான் மாநில சுயாட்சி வேண்டும் என்று தி.மு.க. கேட்கிறது. இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சி கொள்கையைப் பற்றி யாருக்கு ஐயம் வராது என்று கருதுகிறேன்.

பெரியவர் மணலி அவர்களுடைய உரையில், அவருக்குரிய வயது, அனுபவம், தியாகம், தொண்டு இவைகளின் அடிப்படையிலே எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சில அறிவுரைகள் கூறி ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சில அறிவுரைகளைக் கூறியிருக்கிறார்கள். ஒரு கட்சியை நடத்துவது என்பது எவ்வளவு பெரிய சிரமமான காரியம் என்பது மணலி போன்றவர்கள் புரிந்துகொள்ளாதது அல்ல. அவர்களே கூறியதைப்போல் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப் பெற்று இன்றைக்கு மட்டுமே பல சோதனைகளைச் சந்திப்பது அல்ல, அண்ணா அவர்களுடைய காலத்திலேயே பல சோதனைகளைச் சந்தித்து அவர்களை அண்ணா அண்ணா என்று அன்பொழுக அழைத்தவர்களே மேடைகளிலும் ஏட்டிலும் திருவாளர் அண்ணாதுரை என்று அழைக்கின்ற அளவிற்கு அவரே அந்த சோதனையை சமாளிக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டு அண்ணா அவர்கள் அதனைச் சமாளித்தார்கள். பெரியவர் மணலி போன்றவர்கள், பிற்பட்ட மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் நடத்தப்படுகிற இந்த இயக்கம் அழிந்து போகாமல் காப்பதற்கு இந்தக் கழகத்தினுடைய தலைவர்கள் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை சொன்னார்கள். அதைச் செயல்படுத்த நாங்கள் அண்ணா வழியிலே என்றென்றும் அயராது உழைப்போம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிடிப்போம் என்று பிடிவாதம் பிடிக்காமல்—அவரவர்கள் தங்கள் தங்கள் கடமையை உணர்ந்து எங்கு தவறு நடந்தாலும் அதைச் சுட்டிக்காட்ட முற்பட்டால் இந்தக் காரியங்கள் இன்னும் திறம்பட நடைபெறும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். வறட்சி நிவாரணப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவதற்கு அரசுதான் அங்கங்கே சர்வகட்சி கமிட்டிகளைப் போட்டால்தான் என்ன? போடக் கூடாது என்பதில் பிடிவாதம் காட்ட வேண்டிய அவசியம் என்ன? அதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சர்வ கட்சி கமிட்டி போடுவது என்றால் சில இடங்களில்—நம் நாட்டில் எத்தனை கட்சிகள்தான் இருக்கின்றன என்பதற்கு எண்ணிக்கையே தெரியவில்லை. சில இடங்களில் சர்வகட்சி என்கிறபோது பிரதிநிதிகளே இல்லாமல் இருப்பார்கள். அப்படிப்பட்ட சங்கடங்கள் காரணமாகத்தான் சர்வகட்சி கமிட்டி தேவையில்லையென்று கருதுகிறேன். இந்த கண்காணிப்புப் பணிகளை பொதுமக்களேகூட ஏற்றுக் கொள்ளலாம்

அடுத்து, நமது குடிநீர் வாரியத்தின் சார்பாக என்ன காரியங்கள் நடை பெற்றிருக்கின்றன என்பதாக நமது கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும் போது கூடக் குறிப்பிட்டார்கள். 2, 3 மைல் தூரம் நடந்து சென்று குடி தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலையில் பல இடங்களில் மக்கள் குடி தண்ணீர் கிடைக்காமல் அல்லலுறுகிறார்கள் என்று சொன்னார். நான் அவை களை அறவே மறுக்கவில்லை. இந்த நிலைமைகளை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைத் தான் எண்ணிப் பார்க்க வேண்டும். குடிதண்ணீர் பிரச்சினையைச் சமாளிக்க குடிநீர் வாரியத்தின் சார்பாக மாத்திரம் வறட்சி நிவாரண சிறப்புப் பணி களாக 2,392 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன இந்த நடப்பு நிதியாண்டில். அதைத்தவிர இந்த நிதி ஆண்டில் கிராமங்களில் 1,107 மேல்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்கும், 2,150 இடங்களில் ஹாண்டு பம்பு போடுவதற்கும் பணிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை எல்லா வற்றுக்குமாக சுமார் 5½ கோடி ரூபாய், நான் முதலில் குறிப்பிட்ட 19 கோடி ரூபாயை உள்ளிட்டு, 5½ கோடி ரூபாய் குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு செலவிட திட்டமிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வந்திருந்தார்கள். தங்களுடைய வருகையை நிரூபிக்கப் பதிவேட்டில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஆளுநர் உரை நிகழ்த்தும் நேரத்தில் அந்த மன்றத்தில் இருக்கமாட்டோம் என்பதைக் காட்டத்தான் அவ்வாறு செய்தோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : சார், கடைசியிலே முதலமைச்சரவர்கள் ரொம்ப லேட்டாக an attack on political parties ரொம்ப லேட் டாகப் பேசி ஏதோ நாங்களெல்லாம் **** இங்கே வந்தோம் என்று சொன்ன நிகழ்ச்சி கண்டிப்பாக நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட கட்சியைப் பொறுத்தவரையில் ஆளுநர் உரையைப் பகிஷ்கரிக்கிறோம் என்றால்

Boycotting Governor's Address

அந்த சிட்டிங் பூராவும் பகிஷ்கரிக்கவில்லை என்று அறிக்கை விட்டிருக்கிறோம். இங்கே ஒரு மரபு இருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற மரபு என்னவென்றால், ஜனாதிபதி இரண்டு அவைகளையும் கூட்டி வைத்துச் செய்யும் பிரசங்கம் இருக்கிறதே அது பிரசங்கமே இல்லை. அது பொதுவாக நடத்தும் ஒரு பிரசங்கம். பிறகு அரை மணி நேரம் கழித்து தனியாக இரண்டு சபை களையும் கூட்டுகிறார்கள், அப்பொழுது அங்கேயிருக்கும் ஜனாதிபதி உரை சபைக்கு முன்னால் வைக்கப்படுகிறது.

After that it is laid on the table of the House. The House takes note of that அந்தமாதிரி முறை இங்கே இல்லை. இரண் டையும் சேர்த்து வைத்து ஒரு கூட்டம் மாதிரி நடக்கிறதே தவிர அந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின் கருத்துக்களைச் சொல்வதைப் பகிஷ்கரிக்கிறோம் என்று அரசியல் ரீதியாகச் சொன்னோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : திரு. கே. டி. கே தங்கமணி அவர்கள் வருத்தப்படுவார்களேயானால், நான் சொல்கிறேன், **** வந்தார்கள் என்று நான் சொல்லவே இல்லை. அப்படி ஏதாவது நான் சொன்ன தாகக் காதில் விழுந்திருந்தால் அது நிச்சயமாக நடவடிக்கைக் குறிப்பில் இருக்கவேண்டாம். அப்படி நான் சொல்லவேயில்லை. கையெழுத்துப் போட் டால் வந்ததாகத்தான் அர்த்தம், எனவே அவைக்கு வந்தார்கள் என்று மகிழ்ச்சியைத்தான் தெரிவித்தேன். ஏன் போட்டீர்கள் என்று கேட்கவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1975 பிப்ரவரி 27] [டாக்டர் மு. கருணாநிதி]

திரு. எட்மண்ட் அவர்கள் தாழ்வாரம் வரையில்தான் தாங்கள் வந்ததாகவும், அங்கே வந்ததால் இங்கே வந்ததாக அர்த்தம் அல்ல என்றும் குறிப்பிட்டார்கள். இந்த வாதம் வரும்பொழுது வேறொரு விஷயத்திற்கு வேறொரு மாதிரியாக அந்த வாதம் திரும்புகிறது. வீட்டு வாசலையே மிதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டு பிறகு தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்திருந்துவிட்டு வீட்டிற்கே போகவில்லை என்று சொல்லும் வாதத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நாங்கள் கையெழுத்துப் போட்டோம் என்றால் எதற்காகப் போட்டோம்? கையெழுத்துப் போடவில்லை என்றால்

It would mean we were absent. We wanted to make it known to the Governor that we were present in the lobby but not present during the Governor's Address. There is difference between absence and boycotting.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, சில நேரங்களில் வாக்-அவுட் செய்கிறோம். * * . . . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நடவடிக்கைக் குறிப்பிலே இருக்க வேண்டாமென்று சொன்னதை மறுபடியும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு வாக்-அவுட் செய்தால் அந்தக் கையெழுத்து ரத்தாகாது. அந்த அடிப்படையில் வந்ததாகத்தான் கருதப்படும். எனவே, அந்த அடிப்படையிலேயே இப்பொழுதும் நாங்கள் வெளியே இருந்தோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, என்னுடைய பேச்சிலே பல்லாயிரக்கணக்கான கார்டுகளை ஒரே கடைக்கு அளிப்பதால் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னேன். எனவே, 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று ஏற்படுத்தப்படுமா? அல்லது 1,000 கார்டுகளுக்கு ஒரு கடை என்றாவது ஏற்படுத்தப்படுமா? என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள்? ஏனென்றால் கூட்டுறவுச் சங்கக் கடைகளும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளும் குறைந்த அளவில்தான் இருக்கின்றன. எனவே என்ன அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏற்கனவே 7,000 கார்டுகள் என்ற அளவில் கொடுக்கப்பட்டது. இப்பொழுது 2,000 கார்டுகள் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் கூறும் கருத்தை யோசித்து இன்னும் தகுந்த அளவிற்கு ஆக்க முடியுமா என்பதை யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: I am pressing my amendment. There have been precedents for it in the Upper House where amendments to the motion of thanks to the Governor for his address have been moved and voted upon.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU K. T. K. TANGAMANI: Sir, I am not pressing all my amendments, except amendments 1 and 2 relating to public distribution system of all essential articles and public control committee at different levels for drought relief work.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கனவே அவர் மூவ் செய்திருக்கிறார். இப்பொழுது மறுபடியும் படிப்பது என்பது இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மூன்று திருத்தங்களும்கூட 'கிளப்' பண்ணிப் போட்டிருக்கிறார்கள்.

I am pressing the first two amendments relating to public distribution system and public control committees for drought relief work.

இந்த இரண்டையும் ஓட்டுக்கு விட வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, சங்கமுத்து தேவர், கோவை செழியன், ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

TRUTH ALONE TRIUMPHS